DEPARTMENT OF INFORMATION & PUBLICITY * GOVERNMENT OF PUDUCHERRY * PUDUCHERRY

# செய்திக் குறிப்பு

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மூலம் தொடங்கப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் "சுவர்ண ஜெயந்தி கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம்" (Swarnajayanti Grama Swarozgar Yojana) திட்டம், கிராம மக்களிடையே சுய வேலை வாய்ப்பினை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் செயல் படுத்தப்பட்டு வருகிறது. கிராம மக்களின் பொருளாதார நிலையை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன் நடவண் அரசு இத்திட்டத்தை "தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்" (National Rural Livelihood Mission) என்ற புதிய பெயருடன் பொலிவூட்டியுள்ளது. இது இந்தியா முழுவதும் செயல்படுத்தப்படுகிறது.

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மேற்குறிப்பிட்ட "தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்" (National Rural Livelihood Mission) என்ற திட்டம் நடப்பு நிதியாண்டிலேயே அந்தந்த மாநிலத்திற்கென்று தனியாக "மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்" (State Rural Livelihood Mission) என்ற அமைப்பை அமைத்து அதற்கான இயக்குநரை நியமித்து இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. தற்போதுள்ள சுவர்ண ஜெயந்தி கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் வழங்கப்பட்டு வந்த நிதி 31.12.2011 முதல் நிறுத்தப்படவுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஆகியோரின் ஆலோசனைப்படி புதுச்சேரி அரசும் இப் பெயர் மாற்றத்தை உடனடியாக அமுல்படுத்த முடிவு செய்ததன்படி புதுவையில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை "மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்" என அறிவிக்கப்படுகின்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்கள், இந்த "மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இயக்குநராகவும் செயல்படுவார். தற்போது மாவட்ட ஊரக வளர்ச்சியின் நிர்வாகக்குழுவே மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளையும் நிறுவகிக்கும்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்,

புதுச்சேரி.

# Press Note

The Ministry of Rural Development , Government of India has restructured the existing Centrally Sponsored Scheme Swarnajayanthi Gram Swarozgar Yojana(SGSY) through out India as National Rural Livelihoods Mission (NRLM).

Government of India expects all States/UTs would have to transit to NRLM in the Current Financial Year by fulfilling certain pre-conditions such as notifying separate State Rural Livelihood Mission (SRLM) society and appointing a Mission Director of SRLM. The funding under SGSY is going to stop by 31.12.2011. Hence in consultation with Hon'ble Chief Minister and Honb'le Minister for Rural Development , it is notified that ensuing DRDA to act as "Puducherry State Rural Livelihood Mission Directorate" for implementation of NRLM in Puducherry and Project Director, DRDA would function of Mission Director, Puducherry State Rural Livilihood Mission (PSRLM). The existing Governing Body of DRDA would also look after the functions of the Governing Body and Executive Committee of PSRLM

**Hon'ble Minister of Rural Development**
Govt. of Puducherry